ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

**नारीस्तनभरनाभीदेशं दृष्ट्वा मागा मोहावेशम् ।**
**एतन्मांसवसादिविकारं मनसि विचिन्तय वारंवारम् ॥**

**नारीस्तनभरनाभीदेशं**—ஸ்திரீயினுடைய ஸ்தனங்களையும், நாபி முதலிய அவயவங்களையும்

**दृष्ट्वा**—பார்த்து

**मोहावेशं**—விஷயாநுபவத்தில் அதிகம் ஈடுபட்டவனாக இருப்பதை

**मागा:**—அடையவேண்டாம்

**एतत्**—ஸ்திரீயின்ஸ்தனம் முதலிய அவயவம்

**मांसवसादिविकारं**—மாம்ஸம் ஊன் முதலியவைகளின் விகாரமென்று

**मनसि**—சித்தத்தில்

**वारंवारं**—அடிக்கடி

**विचिन्तय**—நன்றாய் ஆலோசனை செய்

திருடமான வைராக்கியமேற்பட வேண்டி விஷயங்களிலுள்ள தோஷத்தை விளக்கிக் காட்டுகின்றார்.

ஸ்திரீகளுடைய ரக்தம், வஸை, த்வக், முதலானவைகளுடன் கூடிய ஸ்தனம் நாபிப்பிரதேசம் முதலிய மாம்ஸபிண்டங்களான அவயவங்களைக் கண்டு மோகத்தை அடையாதே. அதாவது துஷ்டக்கிரகங்களால் பீடிக்கப்பட்ட ஒருவன் எங்ஙனம் தனக்கு வசப்படாத சித்தத்தை யுடையவனாய்க்கொண்டு தோன்றியபடியெல்லாம் செய்ய முயலுவானோ, அங்ஙனம் நீயும் யத்தனிக்கவேண்டாம் என்று பொருள். பின்னும் என் வார்த்தையை மாத்திரம் நீ நம்பவேண்டாம். அவசரப்படாமல் உனக்கு மோகத்தையுண்டுபண்ணும் இவைகளுடய உண்மையான ஸ்வரூபத்தை நன்கு விசாரித்துப் பார்த்தால் உனக்கேத்தெரியும். இவ்விதம் பலதடவைவிசாரித்து எற்படும் திருடமான விவேகத்தாலும்வைராக்கியத்தாலும் இந்தமோகத்தை அறவேயொழித்து நற்கதியைப்பெற எத்தனிக்க வேண்டும்.ஸ்திரீகளென்று கூறப்படும் கண்டகங்கள் நம்மை ஹிம்ஸிக்கா மலிருப்பதற்கு விவேக வைராக்கியம் அவசியம்வேண்டுமென்று.

**पुरेषु पल्लीषु च पत्तनेषु स्त्रीकण्टकास्सन्ति विचित्रवेषाः ।**
**विवेकवैराग्यसुपादरक्षां विना कथं संचरतीह भिक्षुः ॥**

இதினால் ஒரு பெரியார் கருதுகிறார்.

உபபத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

க்ஷய-௵ ஆனி-௴ கஎ-உ


## கடவுள் ஒருவர் உண்டு.

மானிடப்பிறவியின் முக்கிய உத்தேசமானது இகபரசாதனங்களைப் பரியாலோசித்து அறிந்து அவற்றைக் குற்றமற அடைதலையன்றி வேறல்ல. ஆயினும், ஊழ்வினையின் ஊக்கத்தாற் சிலர் (நாஸ்திகர்) பரத்துக்குறிய ஆன்மா, அல்லது பரவஸ்துவொன்று கிடையாதென்று வாதிப்பதால், முதல் முதல் அதைக் குறித்து இங்கு இடத்துக்குத் தக்கவாறு சுருக்கி நியாயவாயிலாக விவகரித்துக் கண்டித்து உண்மையை உறுதிப்படுத்துவாம்.

மேற்சொன்ன நாஸ்திகர்களிற் சிலர் இப்பிரபஞ்சத்துக்கு மூலகாரணம் (Autom) பரமாணுக்கள் என்றும், அவ்வணுக்களன்றி வேறே சைதன்யமுள்ள வஸ்துக்கள் கிடையாவென்றும் அல்லது காணப்படவில்லை என்றும் சொல்லுகிறார்களன்றோ. இதில் முக்கியமாய் விசாரிக்கவேண்டியது, அப்பரமாணுக்கள் ஜடமா? சித்தா என்பதே. ஜடம் என்பது உணர்ச்சி, ஞாபகம், யோசனை யாதி அறிவு லக்ஷணமில்லாதது எனவும், சித்து என்பது உணர்ச்சி, ஞாபகம், யோசனையாதி, அறிவு லக்ஷணமுள்ளது எனவும் பொருள்படும். எனவே மேற்சொன்ன பரமாணுக்கள் ஜடமென்பது அவர்கள் கொள்கையாகையால் இங்கு அவ்வணுக்களின் தத்துவத்தைப் பரியாலோசிப்பாம்.

அநாதியாயிருக்கும் பரமாணுக்கள் ஓராதிகாலத்தில் ஒன்றோடொன்று கூடுவதற்குக் காரணமும் அதற்குமுன் கூடாமல் நின்றதற்குக் காரணமும் நாஸ்திக சிநேகிதர்களாலேயே காட்டப்படவேண்டியதன்றோ? ஒன்றோடொன்று கூடிற்று என்றால் அஃது ஓர் காரியமாயிற்று. ஆகவே, காரியத்திற்குக் காரணம் வேண்டுவது ஆவசியகம். ஞாபக யோசனையாதி அறிவு லக்ஷண

மில்லாத ஒரு ஜடவஸ்துவானது தானே காரியப்படமாட்டாது. அறிவுள்ள மற்றோர் வஸ்துவால் காரியப்படுத்தப்படவேண்டியதே இயல்பு.

பரமாணுக்களுக்கு ஒன்றோடொன்று கூடுஞ்சுபாவமுண்டு. ஆதலால் அவை உணர்ச்சி ஞாபகமாதி அறிவு லக்ஷணமில்லாத ஜடமாயிருப்பினும் ஒன்றோடொன்று கூடும். என்னில், சுபாவம் என்பது நெருப்புக்குச் சூடுபோல் இயற்கையாய் என்றுமுள்ள தன்மை. ஆகவே, ஒன்றோடொன்று கூடும் சுபாவமுள்ள பரமாணுக்கள் அங்ஙனம் கூடிய காலத்திற்கு முன் அநாதிகாலமாய்க் கூடாமலிருந்தனவென்று அவர்களே சொல்வதால் கூடும் சுபாவமுள்ளது என்னும் நியாயம் இமைப்பொழுதும் நிலைநிற்கமாட்டாது.

பரமாணுக்கள் பல சுபாவமுடையன, ஆதலால் ஒன்றோடொன்று சேர்ந்து காரியப்படத் தடையில்லையென்னில், பலசுபாவங்களை யொப்பினும் அநாதியில் கூடுஞ் சுபாவமில்லாதிருந்தபடியால் அணுக்கள் தாமே காரியப்பட்டனவென்பது பழுதெனவறிக. இனி, பலசுபாவமுடையனஎன்பதை யோசிக்குமிடத்து துவம்ஸசுபாவம் விடுவிக்கும் சுபாவமாகிய இத்பாதி சுபாவங்களும் அணுக்களுக்கு உண்டெனக் கொள்ளவேண்டி வரும். வரவே வேறுபடுத்துமிவ்விரு சுபாவங்களின் முன் ஒன்றுபடுத்துதலாகிய கூடுஞ்சுபாவம் எப்படி ஜீவிக்கும்? இதனாலும் அணுக்கள் தாமே காரியப்படாவெனத் துணிவாயேற்படுகின்றதே.

அப்படிக்கன்று, ஊசியுங் காந்தமும்போல் பிரிதி பரமாணுவுக்கும், ஒரோருகுணமும் அக்குணத்தால்ஒன்றோடொன்று சேருந்தன்மையும் உண்டாகும் என்னில் எத்தனைகோடி குணங்களிருப்பினும் கூடுங்காலத்துக்கு முன் அநாதியாய்க்கூடாதிருக்குங் குணம் ஏற்படுவதால், அங்ஙனங் கூடாதிருந்ததற்கும் பின்புகூடினதற்குங் காரணங் காட்டவேண்டியது ஆவசியகமென்றே முடிகின்றது. அவ்வாறாயின் அணுக்களுக்கு அறிவுடைமையையொப்ப வேண்டிவந்து நாஸ்திகங்கெடும் என்று முண்மை நமது சிநேகிதர்களுக்குத் தெரியாமற் போகாது. ஆகவே இவ்வழிகளெல்லாங் குற்றமென்றே யுணர்க.

இப்பிரபஞ்சமானது சராசரமென்னும் இருபகுதியினையுடையது, அவற்றுள் சரமென்பது அறிவுடையபொருள். அசரமென்பது அறிவில்லாப்பொருள். ஆக இவ்விரண்டுங் கூடியவஸ்துவே பிரபஞ்சமென்று கூறப்படுகிறது.

இப்பிரபஞ்சமோ தோன்றி நின்றழியுந் தன்மையுள்ளது. ஆகையால், தோன்றி நின்றழியுஞ்செய்கைக்குக் காரியம் என்று சொல்லப்படும். காரணமின்றிக் காரியமில்லையென்னும் நியாயத்தால் இப்பிரபஞ்சத்திற்குக் காரணமாகக் கடவுள் ஒருவர் வேண்டுமென்று மேலோரால் நிதர்சனமாய் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால், ஈசுவரன் ஒருவர் உண்டென்பதை யுறுதியாகக் கொள்வதே நாம் பிழைப்பதற்கான பேரியல் வழியாமென்க.

உபபத்திராதிபர்.

---

# "தீக்ஷை தர ஆதித்திராவிடருக்கு."

1926 ஜுன் 5ம் தேதி சனிக்கிழமை ஸ்வராஜ்யாவில் தலைமகுடமிட்ட ஓர் விஷயம் பிரசுரமாய் இருக்கிறது அதில் திருவண்ணாமலை தாலூகாவில் வீரய்யன் தலைமையின்கீழ் நடைபெற்ற ஆதித்திராவிட மகாநாட்டில் காவ்யகண்ட கணபதிசாஸ்திரிகள் அரிய பெரியசொற்பொழிவு நிகழ்த்தினாராம். அதன் விஷயத்தையும் அதற்கு மறுப்பையும் இங்கு வரைகின்றேன்.

முதலில் காவ்யகண்ட கணபதிசாஸ்திரிகள் கூறுவது இது "வேதத்தில் தீண்டாமை கிடையாதெனப் பலமுறை சொல்லியுள்ளதையே இப்போதும் சொல்கிறேன், வேதகாலத்தில் பிராமணர்கள் என்னென்ன மந்திரங்கள் வந்தனங்கள் வழிபாடுகள் செய்து வந்தார்களோ அவையெல்லாம் ஐந்துஜாதி ஜனங்களுக்கும்உண்டு என்பது இங்கு விசாரிக்கத்தக்கது."

காவ்யகண்டரதின் கூற்றுப் பொதுவாய் வேதத்தில் தீண்டாமை கிடையாதென்பதேயாம். இவர் சொல்வது எந்த வேதத்தைப்பற்றியதோ பைபில் என்றஸத்தியவேதமா? கொரானா? அல்

லது இன்னும் நமது வேதத்திற்குப் புறம்பானவேதமா? அதை இன்னவேதமென்று காவ்யகண்டம் குறிப்பிடாமல் விட்டுவிட்டது யாதுகாரணம் பற்றியோ. நமது வேதமாக இருக்கலாகாதோ வெனில் இல்லை, இல்லை. ஏனெனில் "வேதகாலத்தில்" என்று ஒருவார்த்தை குறிப்பிட்டிருக்கிறார். இவ்வசனம் நமது வேதத்திற்கு ஒருபோதும் பொருந்தாது நமதுவேதம் அனாதி என்பதை நம்மத ஆஸ்திகர்கள் யாவரும் அறிந்திருப்பார்கள். மற்றைய மதஸ்தர்களின் வேதங்கள் பிறந்து இத்துணை வருடங்களாகின்றனவென்று அவர்களே வருடங்களைக் குறிப்பிட்டு வருகின்றனர். ஆழ்ந்து பார்க்கின் அவர்களுக்குக்கூட இவ்வசனம் பொருந்த அவகாசமிராது, ஏனெனில் வேதகாலத்தில் என்றால் இப்போது வேதகாலமில்லையோ. ஆகவே, இக்கூற்று வீண்தானே. வேதகாலத்தில் பிராமணர்கள் என்று சொல்வதால் நமது வேதத்தில்தான் பிராமணன் முதலிய பிரிவுகள் ஏற்பட்டிருப்பதால் நமது வேதத்தையே கூறுவதாய் வைத்துப்பேசுவோம். அவ்விதமாயினும், நமக்கு ஒவ்வாது. அனாதிகாலம் தொட்டு நாளதுவரையில் வேதகாலம்தான். அத்தகைய வேதகாலத்தில் பிராமணன் எந்த மந்திரத்தை ஓதுவானோ அது பொதுவாய் வேதத்தில் சம்மந்தப்பட்ட மூவருணத்தவருக்குமே பொதுவாய் இருப்பதில்லை, பிறகு நான்காவதற்கும் அதற்கு மேற்பட்டதற்கும் கேட்கவேண்டுமோ. இனி கலிமுற்றும் காலத்தில் வருணங்களெல்லாம் கலந்துபோம் என்றும்; வேதங்களின் வாதங்கள் ஒழியுமென்றும் பலவாறு கூறியிருக்கிறது. இதை எங்கேயோ கேள்விபுற்ற இக்காவ்ய கண்டம் வேதத்திற்கும் கண்டமாய்த்தோன்றி வேதம் முடிந்துவிட்டதாகவே ஸ்வப்பனங்கண்டு திடுக்கிட்டெழுந்து ஆதித்திராவிடரெனப் பெயர்பெற்ற பாச்சேரியில் விழுந்து விழித்துக்கொண்டு அவர்கள் புடைசூழ என்னென்னவெல்லாமோபிதற்றுகிறார். இவர் சொல்கிற பிரகாரம் நமது வேதத்தில தீண்டாமை கிடையாதென ஒருபோதும் நம்பிவிடவேண்டாம். பாருங்கள்! பிராமணர்கள் ஓதும் மந்திரத்தையும் வழிபாட்டையும் வந்தனங்களையுமே நான்கு வருணத்தவரும் பேதமின்றி நடத்துவதாய் வேதத்திலேற்பட்டிருந்தால் வருணம் நான்கு என்ற பாகுபாடு எதற்கு அதனால் பலன்யாது? இதைப்பற்றி அடிக்கடி ஆர்யதர்மத்தில் பிரசாம் செய்யப்பட்டிருப்பதால் மீண்டும் இங்குகூற அவசியமில்லை

யென இதைவிடுத்து மேற்செல்வாம். பிறகு இவர் இவரது சுற்றத்தார்களை நோக்கி ஸௌத்ரியாகம் உங்களது முன்னோர்கள் செய்திருக்கிறபடியால் நீங்கள் யாகத்திற்குரியவர்களே என்கிறார். ஐயோ யாகமென்றால் என்னவென்றுகொண்டிருக்கிறாரோ தெரியவில்லை. துர்தேவதைகளை ஆராதிக்கும் கீழ்ஜாதியோர்கள் அத்தேவதையின் ஸந்நிதியில் ஆடு முதலியவைகளைப் பலிஇடலாமென்றும் அதுயாகமென்றும் புராணத்தில் பலவிதமாய்க் கூறப்பட்டிருக்கிறது. இதுகொண்டு அத்தகையோரும் ஸோமயாகம் முதலியனச் செய்யலாமென்று ஒருவன் சொன்னால் இதைபகுத்தறிவுள்ள ஆஸ்திகர் யாராவது ஒப்புவாரா. ஸௌத்ரியாகமென்றும் துர்மதியாகமென்றும் சொல்லிப் பலவாறு ஒன்றும் தெரியாத பஞ்சமர்களை அனியாயமாய் ஏமாற்றிப் படுகுழியில் தள்ளப்பார்க்கிறார். இனி அடுத்து மதங்கரிஷி உங்கள் வம்சத்தவர். இவர் பெண்மாதங்கியை ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளும் மாதங்கி நவரத்னமாலா என்ற நூலால் ஸ்தோத்கரிக்கின்றார். காளிதாஸனும் இந்த மாதங்கியைப் பலவிதமாய் துதிக்கின்றார். மாதங்கி என்பது தமிழில் ஸ்ரீ பச்சையம்மன் என்று வழங்குவர் என்கிறார்.

பாருங்கள் நான் முற்கூறியவாறு காவ்பகண்டம் யாதுகாரணத்தாலோ "சேரிநடுவிலகப்பட்டுக்கொண்டு நீங்கள் உத்தமர்கள் உங்கள் முன்னோர் மகரிஷி உங்கள்பெண் பெரியோர்களால் துதிக்கப்பெற்ற பெண்மணி" என்றெல்லாம் கதறுகிறார். என்ன பலனைப் பஞ்சமர்களிடத்திலிருந்து எதிர்பார்க்கிறாரோ? பஞ்சமர்களிடத்தில் இருக்கும் பதார்த்தம் இவருக்கு விரும்பத்தக்கதா? இல்லை. இருக்கட்டும் இதையும் கவனியுங்கள், மதங்கரிஷி உங்கள் வம்சத்தவர் என்கிறாரே இவருக்கு யார் சொன்னார். எந்த புராணத்திலாவது இவரால் ஒப்புவிக்க முடியுமா? இவரது கன்னிகையை சங்கராசார்யார் காளிதாஸன் முதலியவர்கள் துதிக்கின்றார்கள் என்கிறார். இவர் சொல்வதை விளக்கிச் சொல்லத்தெரியாமலோ பஞ்சமர்களுக்குத் தன்னிடத்தில் ஸந்தோஷம் வரவேண்டுமென்றோ தலைசுற்றி உளறுகிறார். இதைவிளக்கிப் பிறகு பதிற்கூறுவாம். பகவத்பாதர் பராசக்தியைக்குறித்து நவரத்னமாலிகையென்று 9 சுலோகம் எழுதி இருக்கின்றனர். காளிதாஸனும் சியாமளா தண்டகம் இயற்றியிருக்கின்றனர். அதில், मतङ्गकुलकन्यका मधुर-

भाषिणी என்றும் जयमातङ्गतनये मातङ्गकन्यां என்றும் இருக்கிறது. மாதங்கன் என்ற வடமொழிச்சொல்லுக்கு பறையன் என்ற அர்த்தமிருக்கிறது. ஆகவே மாதங்ககன்னிகை என்றதனல் பறையன் மகள் என்ருயிற்ரும், அதனுல் பஞ்சமன் உயர்ந்தவனென்றும் அவருடைய பெண் அதனுல் உயர்ந்தவ ளென்றும் ஆயிற்றென்று காவ்யகண்டத்தின் எண்ணம். இங்குசற்று நன்கு கவனித்துப்பார்ப்போம். அவரது மனப்பால் திதிக்குமாவென்பதை கவனிக்கட்டும். மாதங்கி என்பதற்குத் தமிழில் பச்சையம்மன் என்றுவழங்குவர் என்றுஇவர் கூறுகின்றனர். பச்சையம்மன்என்ருல் பஞ்சமனின் மகள்என்று அர்த்தமோ யாது கொண்டுபச்சையம்மன் என்கிருர்

மதங்கர் என்பவர் உண்மையில் பிரம்மரிஷி. இவரது குலத்தில் ஓர்காரணத்தால் பராசக்தி அவதரித்தனள். அவ்வம்மை அவதரிக்கும் பெரும்பாக்கியம் அம்மகான் பெற்றதால் ஆசார்யாளும் கவிகளும் மதங்ககன்னியே என்று புகழ்ந்தனர். ஸ்ரீ ராமபிரானைக் கௌஸல்யை பெற்றமகனே என்றழைக்கிறதில்லையா அதுபோல்தான். ஆகவே இதன் உண்மையை யறியாமல் பறையனின்மகளென்று கூசாமற்கூறிவிட்டனரே. இன்னென்று கவனியுங்கள், தமிழ்க்கவிகள் எங்கேயாவது புலையன்மகள் என்று தெளிவுபடக் கூறியிருக்கின்றனரா? அல்லது எந்தப் புராணத்தில் எத்தனுவது அத்தியாயத்திலிருக்கிறதென்று எடுத்துக்காண்பிக்கத்துணிவரோ. ஒன்றுமில்லாமல் பஞ்சமர் கோஷ்டியின் மத்தியில் கூடிக்கொண்டு ஏன் கூத்தாடுகின்ருர்.

இனி இவர்கூற்றை ஏற்றுக்கொண்டும் இவருக்கு ஸாதகம் கிடைக்குமாவென்பதை ஆராய்வாம்.

மதங்கனென்ருல் பறையன் அவனது கன்னிகைதான்லோக

மாதா, இதனுல் பஞ்சமர்களுக்கு யாது உயர்வு.

## हरेः कोलावतारेण किटीनां का वरेण्यता

ஹரி வராகாவதாரமெடுத்ததால் பன்றிகளுக்குக் கௌரவமென்ன? வராகமூர்த்தியை நாம் பூஜிக்கின்ருேம். அதற்காக அவ்வம்சத்திலுதித்ததென்று பன்றியை யாராவது பூசிக்கிறதுண்டா?

अर्चामस्सततं गणाधिपमथाप्याखून्निहन्मः शतं
ध्यायामो हृदि भैरवं तदपि तु प्रोत्सारयामः शुनः ।
भूतेशं प्रणमस्तथापि शतशो भूतान्निगृह्णीमहे
नह्येकस्य गुणः परस्य महतो दोषानपि प्रोर्णुते ॥

நாம் எப்போதும் கணபதியை அர்ச்சிக்கின்றோம் ஆயினும் அவர் வாகனங்களைக் கொல்கிறோம். பைரவனை எப்போதும் மனதில் தியானிக்கிறோம். ஆயினும் அவரது வாகனமான நாயை வீட்டே றவிடாமல் விரட்டுகிறோம். பூதேசனைத்துதிக்கின்றோம் ஆயினும் பூதங்களை ஓட்டுவோம். ஆகவே, ஒருவருடைய குணம் பிற ருடைய தோஷங்களைப் போக்குமோவென்றபடி அம்பிகை பஞ்ச மனின் குலத்திலுதித்தால் பஞ்சமர்களுக்குக் கிடைத்தலாபம் என்ன? தடாதகைப்பிராட்டி வலைச்சிமகளாய்ப் பிறந்தாளென்ப தால் அவர்களுக்கென்ன? கண்ணன் இடையர்கள்வீட்டில் வளர்ந் தால் இடையர்களுக்கென்ன? தேவலோகத்திலுள்ள ஸரமா என்ற நாயின் வம்சத்தில் உதித்ததென்றால் இங்கு நாய்களுக்கென்ன? ஆகவே இதனால் பஞ்சமர்கள் கௌரவம் வாய்ந்தவர்களென்ற காவ்யகண்டத்தின் கூற்று வஞ்சனையே. பக்தபராதீனரான ஈசன் அவரவர்களின் மனோபீஷ்டத்தைப் பூர்த்திசெய்ய எங்குவேண்டு மானாலும் அவதரிப்பான், அதனால் அவனது தேஜஸ்ஸும் வீர்ய மும் குன்றாது.

இனி அடுத்ததை கவனிப்பாம். அரிச்சந்திரன் யாகத்தை முன்னிட்டு விசுவாமித்திரர் தனதுபிள்ளைகளில் 50பெயரை சபித் துவிட்டார். இந்த 50 பிள்ளைகளும் இச்சாபத்தால் உங்கள் வம்சத்தவராகவே மாறிவிட்டார்கள். நீங்களே இந்நாட்டின் ஆதித்திராவிடர்கள், மற்ற ஜாதியார் பின் வந்த மத்திம திராவி டர். ஆரியர்களாகிய நாங்களோ கடைசியாகக் குடியேறிய அந் திம திராவிடர்கள். மதங்கரிஷி மாதங்கிதெய்வம் வானராள் என்னும் வனசராளாகிய வாலிசுக்ரீவாதி ராமஸைன்யங்கள் நிஷா தாதிபதியாகிய குகன் சபரி கிராதர் முதலியமஹான்களெல்லாம் ஆதித்திராவிடர்களே. ஆதித்திராவிடர்களுக்கு ஆதிகாலத்தில் தொண்ணூறு கோட்டைகளுள்ள ஓர் ஸமூகம் எவ்வளவு ஸேனை

ஸைன்யங்களுடன் இருந்திருக்க வேண்டுமென்பதை யோசியுங்கள். இந்த ஸைன்யாதிபதிகள் தஸ்யூ என்று அழைக்கப்பட்டனர் என்றார்.

இங்கு முதலில் ஒன்று சொல்லிக்கொள்கிறேன். தென்னாலி ராமன் கதை யொன்றுண்டு. மூர்க்கராஜன் ஸமஸ்தானத்தில் ஓங்கி பேசுபவன் ஜயம் கொள்வானென்பதை அறிந்த மந்திரி ஒருவனிருந்தான். ஒருநாள் அரசன் ஜோஸ்யனை அழைத்து நாளைய தினம் நல்ல தினமாவென்றான். ஆம், உத்தமமான நாள் என்று சொல்லிவிட்டான். அதைப் பிறகு வேறொரு ஜோஸ்யன் வந்தபோது அவனைக் கேட்டான். அவன் உண்மையாய் நல்லதினமே இல்லையென்று சொல்லிவிட்டான். வந்தது விட்டது மகாராஜாவுக்குக் கோபம். உடனே ஜோஸ்யனை அழைத்துவரச் சொன்னான். விஷயத்தை அறிந்த ஜோஸ்யன் மந்திரியை சரணம் புகுந்தான். மந்திரி பயப்படாதே என்று சொல்லி அவனுடன் அரண்மனை சென்றான். புது ஜோஸ்யனும் வீற்றிருந்தான். அரசன் கோபத்துடன் தன் ஜோஸ்யனை நொக்கி ஓய் என்ன காரியம் செய்தீர்என்று பல்லைக்கடித்தான். உடனேமந்திரிஎழுந்துமகாராஜா கோபித்துக் கொள்ளக்கூடாது. இப்போது பாருங்கள் எல்லாவற்றையும் ஆம் ஆம் என்று முன்னிலையிலேயே ஒப்புக்கொள்ளச் சொல்கிறேனென்று கூறி, வந்த ஜோசியனை நோக்கி ஓய் நாளைய தினம் செவ்வாய்க்கிழமையல்லவா என்றான். ஆம் என்றான். கேட்டை நக்ஷத்திரமா ஆம், அமாவாஸ்யையா ஆம் என்றான். மந்திரி போதுமென்றான். மகாராஜா உடனே சிரித்துக்கொண்டு அவனை விரட்டி விட்டான். இதுபோல் ஓங்கிப் பேசி காரியம் சாதிக்கப்பார்க்கிறார், இப்போது காவ்யகண்டம் திவ்யசபையில் போய் நின்றுகொண்டு ஒன்றுக்கொன்று சற்றேனும் பொருந்தாத வார்த்தைகளைக் கூச்சமின்றிக் கதறிவிட்டார். இதையும் பத்திரிகையில் சொற்பொழிவுநிகழ்த்தினர் என்றுபுகழ்ந்து விட்டார். என்னென்று சொல்வேன் இதை ஓர் விஷயமாய் எடுத்து நமது பத்திரிகையில் நானும் எழுத வந்தேனே யாது செய்வது பதிற் கூறவேண்டியது தான்.

முதலில் இவர் அரிச்சந்திரன் யாகத்தை முன்னிட்டு விசுவாமித்திரர் தனது 50 பிள்ளைகளை சபித்துவிட்டார். இவ்வைம்பது

பெயர்களும் உங்கள் வம்சத்தவர்களாகவே மாறி விட்டார்கள் என்கிறார். இதில் பஞ்சமர்களுக்கு கௌரவமா இகழ்ச்சியா வென்பதை சபையோர்கள்கவனித்தார்களா? இல்லை, இதைகௌரவமாய்த் தான் நினைத்ததாய்த் தெரிகிறது. சபித்தார் என்றால் மரியாதையாய் யாகத்தை நடத்திவிட்டு வாவென்று அனுப்பினார் என்று காவ்ய கண்டத்தின் அர்த்தமோ இல்லை. உண்மையை கவனிக்கட்டும். இது இங்கு இவர்களுக்கு இழிவையே கொடுக்கும். சாபம் என்றால் ஸ்வபாவத்தில் இருக்கும் நிலையிலிருந்து மிகவும் துக்ககரமான ஈன ஜன்மத்தை அடையச் செய்வதென்பது தான். அதுபோல் நீங்களெல்லோரும் சண்டாளர்களாகப் போகக் கடவீர்களென்றால் மகா பாபஜாதியிற் பிறவுங்களென்று யிற்றுஇத்தகைய சாபம் பெற்றவர்கள் உங்கள்ஜாதியில்பிறந்தார்களென்று சுட்டிச் சொன்னால் இதைக் காட்டிலும் அவமானப் படுத்தக்கூடிய வசனம் இன்னும் உண்டோ. இதற்காக இவர் பேரில் மானநஷ்டதாவா செய்யக்கூடாதா. இம்மட்டா; இன்னும் மேலே பாருங்கள்; நீங்களே இந்நாட்டின் ஆதித்திராவிடர்கள் என்கிறார். திராவிடர் என்றால் மிகப்பூஜிக்கத் தக்க பெரியோர்களென்ற அர்த்தமோ, இல்லை. அவ்வடமொழிச் சொல்லின் அர்த்தத்தை கவனியுங்கள். சரித்திரக்காரர்கள் கூறுகிறபடி ஆதியில் இத்தேசத்தில் சிலர் கையில் வில் அம்பை எந்திக்கொண்டு ஆடைகூட அற்று காட்டுமிராண்டிகளாய் மிருகங்களையும் பக்ஷிகளையும்கொன்று பச்சையாகவே தின்றுகொண்டு காலம் கழித்துக் கொண்டிருந்தனராம்; அவர்களையே திராவிடர்களென்கிறார்கள். அத்தகைய விதிவிலக்கமற்றிருந்த ஜாதியோர் இவர்களென்று பொருளாய்க் கூறுகிறதுபோலிருக்கிறது. பிறகு நாங்கள் அந்திமத்திராவிடர்கள் என்கிறார். இது உண்மை இவர் நினைக்கிறபடி இவர்மட்டிலும் அவர்களுக்கும் கீழ்ப்பட்டஜாதியாய்இருக்கலாம். மற்றவர்கள் அந்திமத்திராவிடர்களென்றால் கடைசியான வேத சாஸ்திர ஸம்பன்னர்களாயும் உபதேசிக்கிறவர்களுமான குருக்கள் என்றேனும். பிறகு மதங்கரிஷிமாதங்கித்தெய்வமென்கிறார். இது அர்த்தமுள்ளதேயில்லை. பிறகு குரங்குகளெல்லாம் ராமஸைன்யங்கள் என்றும் குகன் சபரி முதலியவர்கள் ஆதித்திராவிடர்கள் என்றும் சொல்கிறார். குரங்குகளெல்லாம் உங்கள் ஜாதி என்று பஞ்சமர்களைப்பார்த்துக் கூறுகின்றனர். குகன் முதலியவர்கள்

ஆதித்திராவிடர் என்றால் இவர்களுக்கு என்ன ஆயிற்றென்று முன்னமே சொன்ன ஸமாதானத்தை வைத்துக்கொள்ள வேண்டியது. அவர்களுக்குத் தொண்ணூறு கோட்டையுண்டென்கிறார். வாக்கிலும் இவருக்கு தரித்திரமா 1000 கோட்டையென்றுசொல்லலாகாதோ? இவர்கள் தஸ்யு என்று பெயர் பெற்றவர்களாம்.

தஸ்யூ என்ற பதத்திற்கு இங்கிலீஷில் நல்ல அர்த்தமொன்று சொல்லி ஏமாற்றுகிறார். தஸ்யூ என்றால் திருடன் என்றர்த்தம். இவ்விதமெல்லாம் கூறிவிட்டு ராமாயணத்தாலும் ரிக்வேதத்தாலும் புகழப்பெற்ற இவர்கள் தீண்டாதவர்களாக இருக்கமுடியுமாவென்று சொல்கிறார். ஓரிடத்திலும் இவர்களைப்பற்றிப் புகழவே இல்லை. ஆகையால் இவர் சொல்வது சரியல்ல. ஆதித்திராவிடர்கள் அந்தியத்திராவிடர்களை ஒதுக்கிவைத்து வந்தார்களாம். அந்த வழக்கப்படி இன்னும் வடநாட்டில் மாலாமாதிகா என்று ஆதித்திராவிடர்கள் தங்கள்வஸிப்பிடங்களில் ஆர்யர்களை சேர்ப்பதில்லையாம். இந்த மாலாமாதிகா என்போர் தெருக்களில் பார்ப்பான் வந்துவிட்டால் தீட்டுவந்து விட்டதாக எண்ணி கோமயத்தை வேப்பிலையால் தெளித்து சுத்தம் செய்யும் வழக்கம் இன்னமும் சில சிறு கிராமங்களில் நடந்துவருகிறது என்கிறார். இதை கவனிப்பாம்.

ஆதித்திராவிடர்கள் அந்திய திராவிடர்களை ஒதுக்கிவைத்திருந்தார்களாம். இதற்குப் பிரமாணம் யாதென்றால் இப்போதும் சில கிராமங்களில் மாலாமாதிகா வென்பவர்களின் கதை சொல்கிறார். இது மிகவும் தலைகீழ் வியாபாரம். மனுஷ்யத்தன்மையையறியாத அவர்கள் ஆர்யர்களைத்தள்ளிவைப்பதாவது. இவர்களின் அனுஷ்டானங்களைக்கண்டு சகியாது ஓடிஒதுங்கினவர் சிலர். அவர்களே தஸ்யுக்களென்றழைக்கப்பட்டனர். ஆர்யர்களெனப்படும் சிரேஷ்டர்கள் அகஸ்தியாது ஆக்ஞையினால் பாழாய்ப்போன தண்டகாவனத்தையும் அங்கு சிதறிக்கிடந்த அனாகரிக ஜாதியோடர்களைச் சீர்திருத்தவும் அனுப்பப்பட்டு விந்தியத்திற்குத் தெற்கே குடியேறினர். இவர்களைக்கண்டு பயப்பட்டு ஓடியதையும் ஒழிந்ததையும் இவர் நம்மை ஒதுக்கிவிட்டதாய்க் கூறுகின்றனர்.

இன்னொன்று இங்கு கவனிக்கத்தக்கது இந்த மாலாமாதிகா எனப்படுவோர் நமது தேசத்தில் தீண்டாதஜாதியார்கள் போன்ற

வர்களா அவ்விதமானால் அவர்கள் வீதிவழி பிராமணர்கள்போனால் அவ்வீதியில் கோமயம் தெளிக்கிறார்கள் என்றால் அதனால் அவர்கள் மேல்ஜாதியென்றும் நம்மைக் கீழ்ஜாதியென்றும் அவர்கள் கருதுவதாய் காவ்யகண்டத்தின் அபிப்பிராயம்போலிருக்கிறது. அவ்விதமிருக்கட்டும். இதன்மேல் காவ்யகண்டம் தன்சுற்றத்தார்களான ஆதித்திராவிடர்களுக்கு இவ்விதம் உபதேசிக்கலாம். அதாவது உங்கள் ஜாதியோர்கள் வடதேசத்தில் தன் சேரியில் பிராமணர்களை விடமாட்டார்கள். அதுபோல் நீங்களும் உங்களது பக்கத்திலும் உங்கள் சேரியின் பக்கத்திலும் பிராமணர்களை விடாதீர்கள். அவர்களுடன் நெருங்கிப் பழகாதீர்கள் என்று இவ்விதம் செய்தால் அவர்களும் சுகமாய்வாழலாம். பார்ப்பான்பேரில் வீணானபழியும் வேண்டாம். எப்போதும் ஒத்து முன்னோர்கள்போல் வாழலாம். ஆனால் ஒன்றுண்டு. இவ்விதம் உபதேசித்துவிட்டால் முதலில் காவ்யகண்டமும் அவரைப்போல் ஆதித்திராவிடர்களுக்கு உபதேசம் செய்யும் சகாக்களும் திண்டாடிப்போவார்களென்ற எண்ணத்தினால்தான் சொல்லாமல் கண்டவாறெல்லாம் முன்பின் விரோதமாய்ப்புலம்புகிறார். இன்னொன்று கவனிக்கத்தக்கது.

மாமிச ஆகாரத்தால் உங்களைத் தொடக்கூடாதென்றால் ஆர்யர்களுக்கும் பூர்வம்மாம்மிசமுண்ணும்வழக்கமிருந்தது, பிறகுஉங்கள் நாட்டிற்கு வந்தபிறகு உங்களைப்பார்த்து அவர்களும் விட்டுவிட்டார்கள், அந்த ஆரியர்களைப்பார்த்த ஒரு சிலரால் உங்களுக்குள் இந்தக் கெட்ட வழக்கம் சிறுகச்சிறுக வந்துபுகுந்து நாளடைவில் பிரபலமாகிவிட்டது. இப்போது ஆரியர்கள் சுத்தமாய் இருக்க அவர்களை ஒதுக்கித்தள்ளிய நீங்கள் அசுத்தத்தில் மூழ்கி ஒதுக்கப்பட்டு வருகிறீர்கள். இது தலைகீழான ஆச்சரிய ஸம்பவம் என்று சொல்கிறார்.

இதைச்சற்று ஊன்றிப்பார்ப்போம். இந்த முன்பின் விரோதமான வசனங்களுக்கு என்ன பதிலளிக்கவேண்டியிருக்கிறது. ஆயினும் தலைவிதி கூறுகின்றேன்.

(தொடரும்)

M. N. சுப்பிரமணிய சாஸ்திரியார்.

அந்த விஷ்ணுமூர்த்தி சென்றவுடன் வெள்ளம் பெருக்கெடுத்து வரத்தலைப்பட்டது அதைக்கண்ட தேவியார் "இவ்வெள்ளம் எமது பெருமான்மேல் வருதற்கு ஐயமென்னையுள, இனி யான் என்செய்வேன்" என்று இலிங்கமூர்த்தியைப்பார்த்து "எம் பெருமானே, அன்பார்க்கெளியானே, அடியார் இடர் களையும் அண்ணலே, சிவனே, சிவனே, எனக்கு நீயே கதி" என்று திண்ணிய அன்புடன் தேகபரவசராய்த் தமது இருகாங்களாலும் மார்பிறுக ஆலிங்கனம் செய்து தழுவினர். எம்பெருமானும் பிராட்டியாரது முலைத்தழும்பும் வளைத்தழும்பும் தமது திருமேனியில் அழுந்தப்பெறவே, அதுகாறும் அடங்கப்பெறுத பேரவா அடங்கப்பெற்று காமேசராய் அப்பிராட்டியார் தமது அர்த்தாசனத்திலிருக்க வீற்றிருந்தனர். அப்பொழுது உமாதேவியாரும் தாம் அடைந்திருந்த காளி வடிவம் நீங்கிக்கௌரிநிறம் பெற்றமையால் புதிய கலியாணத்தை விரும்பினர். சிவகணங்களும் ஏனைய ரிஷிகளும் அம்மையப்பருடைய பேரழகைக்கண்டு கலியாண கோலத்தைக் காணப்பேராசை கொண்டனர். இவர்கள் குறிப்பறிந்த பெருமான் விஷ்ணுமூர்த்தியை நோக்கி "நீ எங்களிருவருக்கும் கலியாண மஹோத்ஸவம் நடத்தக்கடவாயாக. நமது கௌரியும் கலியாண கோலத்தில் விருப்புடையவளாய் இருக்கின்ருள், முன்னர் அகஸ்திய முனிவருக்கும் 'இவ்விடத்தில் வருஷந்தோறும் கலியாண மஹோற்சவ தரிசனம் தருகின்ரேம்' என்று வரம் கொடுத்திருக்கின்ரேம். ஆகையால், கலியாணம் நடத்துவதற்கு வேண்டிய பிரயத்னங்களைச் செய்வாயாக" என்று கட்டளையிட்டனர்.

விஷ்ணுமூர்த்தி அக்கட்டளையை ஏற்றுப் பிரமனுகி தேவர்களைப்பார்த்து "ஓ, தேவர்களே, இந்தக் கலியாணத்தை முடிக்க வேண்டிய கடமைப் பாடுடையவர் நீங்களேயன்றி யான் என் செய்வேன்" என்று யாவர்க்கும் பிரியமான பலவார்த்தைகள் சொல்லி "நீங்கள் யாவரும் உம்முடைய உலகங்களிற் சென்று ஆடையாபரண கந்தமாலை முதலியன யாவும் அதிசீக்கிரமாகக் கொண்டுவந்து சேர்க்கவேண்டும்" என்று சொல்ல, யாவரும்

கைகொட்டிக் கூத்தாடி அவரவருந்தங்கள் தங்கள் பதங்களுக்குச் சென்று எல்லாத் திரவியங்களையும் கொண்டுவந்து நாடுநகர முதலியனவெல்லாம் அலங்கரித்துப் பெருமானுக்கும் பெருமாட்டிக்கும் கலியாண மகோற்சவம் என்று எங்கணும் பேரிகை முழக்கி துவஜாரோகணம் முதலியனவெல்லாம் வேதாகம விதிப்படி செய்வித்து ஒன்பது நாளும் செய்யவேண்டிய விழாவையும் முறையாக நடத்திப் பத்தாநாளாகிய உத்திரதினத்தில் ஏகாம்பர நாதரையும் காமாக்ஷி தேவியையும், விஷ்ணுமூர்த்தி லக்ஷ்மிதேவியோடும் "நானென்ன புண்ணியம் செய்தேன். நானென்னபாக்கியம் செய்தேன்" என்று ஸ்தோத்திரம் செய்து புகழ்ந்துகொண்டே அலங்காரம் செய்து கலியாணமண்டபத்தில் சகல வாத்தியங்களும் முழங்க வீற்றிருக்கச் செய்து இலக்ஷ்மிதேவியானவள் க்ஷீரம் சொரிய விஷ்ணுமூர்த்தி ஏகாம்பரநாதருடைய திருவடி விளக்கிப் பட்டாடையால் ஒற்றிப் பாததீர்த்தம் உண்டு மனம் களிந்து மதுபர்க்கத்தை மந்திரத்தை உச்சரித்துக் கொடுத்து பெருமான் திருகரத்தின்மேல் கௌரிதிருக்கரத்தை வைத்து மந்திர நீர்வார்த்துத் தத்தம் செய்யப் பெருமானர் காமாக்ஷியைப் பாணிக்கிரகணம் செய்தனர். பின்னர் பிரமதேவன் சங்கதுந்துபி முதலிய பல வாத்தியங்கள் சப்திக்கவும் வேதம் முதலியன கோஷிக்கவும் கற்பகமலர் முதலியன மாரியகப் பொழியவும் அந்த ஏகம்பவாணைக் காமாக்ஷிதேவியாருடைய கண்டத்தில் மாங்கல்ய சூத்திரத்தைச் சாத்தியருளச் செய்தனன். அக்காலத்தில் தேவயக்ஷகின்னர கிம்புருஷ சித்த சாத்தியர் முதலிய யாவரும் "ஜய, ஜய," என்று முழக்கமிட்டுப் பலபலவாக ஸ்தோத்திரம் செய்து ஆனந்த பாவசமுற்றிருக்கும் சமயத்தில், திருமால் அந்தணர் முதலிய யாவருக்கும் பாயசான்ன வகைகளோடும் பக்ஷியவகைகளோடும் சமாராதனை நடத்தி அதன் பின்னர்க் கந்தம், புஷ்பமாலை, தாம்பூலம் தக்ஷிணை முதலியன அவரவர்க்குக் கொடுத்து மகிழ்ந்திருப்பத் தேவதச்சனாகிய விச்வகர்மா திரிபுரதகன காலத்தில் பெருமான் ஆரோகணித்த பூரதம்போலும் சுவர்ணமயமான ரதமும், இந்திரன் ஸ்படிகத்தினால் செய்த வெள்ளிக்குடையும், பிரமதேவர் ஜடாமகுடம்போன்ற இரத்னமயமாகிய மகுடமும், ஏகாம்பரநாத

ருக்கு முன்னே கொண்டுவந்து வைத்து "எங்கள் செல்வமே, மனோன்மணியாகிய காமாக்ஷியுடன் இந்தக்கலியாண சுந்தர கோலத்தோடும் இவ்வந்திப்பொழுதில் இந்த ரதத்தில் ஆரோகணித்து எங்களால் கொடுக்கப்படும் முடியையும் திருமுடியில்சூடி இந்திரன் குடைபிடிக்க, பாசுபதர்களாய் விளங்கும் தேவசமூகங்களாகிய அடியார்களெல்லாம் பரமானந்த வெள்ளத்தில் மூழ்கப்பவனி வரவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். அவ்வண்ணமே வீதியில் பவனிவந்து ஆஸ்தான மண்டபத்தில் எழுந்தருளியிருந்து யாவரையும் பார்த்து "அன்பர்களே, ஆகாசகங்கையாகிய மந்தாகினி தீரத்திலுள்ள கைலாஸ பர்வதத்தில் ஸதாசிவமூர்த்தியாய் எவ்வண்ணம் பிரசித்தியாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறேனோ அவ்வண்ணம் இந்தக்காஞ்சி க்ஷேத்திரத்தில் கம்பாநதி தீரத்திலிராநின்ற மாவிருக்ஷத்தினடியில் காமாக்ஷிசமேதனாய் ஏகாம்பர நாதன் என்கிற நாமத்தோடு வீற்றிருந்து என்னைச் சரண்புகும் யாவருக்கும் தரிசனமாத்திரத்தில் சகல காம்யங்களும் தருவேன். நீங்களும் ஸ்ரீ கைலாஸத்தைக் காட்டிலும் இவ்விடத்தில் அதிகப் பிரீதியுடையவர்களாய் என்னுடைய சந்நிதானத்தில் வசித்துக் கொண்டு வருஷந்தோறும் வரும் பங்குனி உத்திரத்தில் இந்தக் கௌரி கலியாணத்தை யுத்தேசித்து மஹாபிஷேக சகிதமான மஹாபூஜையும் அலங்கார சகிதமான மஹோற்சவமும் அறுசுவையோடு கூடிய சிறந்த வுணவுகளால் பிராம்மண பூஜையும் செய்து வரவேண்டும்" என்று ஆக்ஞாபித்து அவ்விடத்தில் கல்யாணகோலத்துடன் வீற்றிருந்தனர்.

ஏகாம்பர நாதர் இவ்வண்ணம் அனுக்கிரகம் செய்தபின்னர் கலியாணகோலத்தோடிருக்கின்ற எட்டுவயதுள்ள கௌரியாகிய காமாக்ஷிதேவியானவள் தன்னுடைய நாயகராகிய சூதநாதரை ஸ்துதித்துப் பின்னர் பக்தானுக்கிரக இச்சையோடு அங்கிருந்த யாவரையும் பார்த்து மிகுந்த ப்ரீதியுடையவளாய்ப் "பங்குனி உத்திரதினத்தில்இவ்வாலயத்தில் எங்களிருவருக்கும் கலியாணத்தை பக்தியோடு எவர்கள் செய்விக்கின்றார்களோ அவர்கள் ஸகலாபீஷ்டங்களையும், கோடி கன்னிகாதான பலனையும் அடைவார்கள்" என்று தனது கருணை நிறைந்த திருக்கண்களால் அனுக்கிரகம் செய்து அந்த சூதநாதருடைய வாமபாகத்தில் வீற்றிருந்தனள்.

அதன் பின்னர் பாசுபதர்களாயிருந்தவரெல்லாம் ஆனந்தக் கடலில் மூழ்கினவர்களாய் ஒருவரையொருவர் பார்த்து ஸர்வசக்தியாய் விளங்குகின்ற மஹாசக்தியே இந்தக் காமாக்ஷிதேவியாயும் அந்த மஹாசக்தி நாதராகிய மஹாதேவரே இந்தச்சூதலிங்க நாதராயும் பிரகாசித்துக்கொண்டு கலியாணவரதர் என்றும் முக்திப்பிரதர்என்றும் யாவராலும் புகழப்பெற்று விளங்குகின்றார் என்று போற்றிப் பரமசிவபதத்தை யடைந்தனர்.

மஹிமை.

காவேரிநதிக்கரையிலுள்ள திருப்பனங்காடு என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் யஜுர்வேதியாகிய சம்பு என்றும் ஓர் வேதியனிருந்தனன். அவன் காஞ்சி நகரத்தின் பெருமையையும் பங்குனி உத்திர மஹோற்சவ மகிமையையும் கேட்டுத் தான் தரிசிக்க வேண்டும் என்றெண்ணிக்காஞ்சி நகரத்தையடைந்து கலியாண மஹோற்சவத்தைக் கண்டுகளித்து "எம்பெருமானே, இவ்வைபவத்தை வருஷந்தோறும் யான்கண்டுகளித்து உய்யுமாறு அருள் செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்துக்கொண்டு தன் தேசத்திற்குப்போய் பதினாயிரம் வருஷம் ஜீவித்திருந்து பின்னர் சிவகணங்கள் விமானம் கொண்டுவர ஸ்ரீ கைலங்கிரிக்குச் சென்று அங்கு சிவகணங்களுடன் வாழ்ந்திருந்தனன். பின்னர் ஆயிரம் தலைமுறை அவ்வேதியன் வம்சத்தில் வந்தவர்களெல்லாம் ஏகாம்பரநாதருடைய கலியாண வைபவத்தைக்குடும்பசமேதராய்வந்து தரிசித்துத் தங்கள் தேசம் செல்லும் நியதியில் தவறாதிருந்து முடிவில் ஒவ்வொருவரும் சிவகணங்களால் அழைக்கப்பட்டுச் சிவலோகம் சென்றனர்.

எட்டாவது—அத்தியாயம் ரசாலேசப் பிரபாவம் முற்றிற்று.